கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.54/2019** **PW: 1** **28.01.2026**

2026ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 நாள் வாதி தரப்பு சாட்சியாகிய ராஜாமணி என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாமணி | வயது | 50 |
| த/க. பெயர் | ராஜேந்திரன் | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | லக்கூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

மாரியம்மன் கோவிலில் இருந்து வடக்கு பக்கம் என் சொத்திற்கு செல்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.357/10 எனது சொத்திற்கு தெற்கில் உள்ள காலிஇடத்தை பி அட்டவணை சொத்தாக காட்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. மல்லிகா பெயரில் பி அட்டவணை சொத்தை பொறுத்து பட்டா வழங்கியது தவறு என்று வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1964 ல் என் மாமனார் கிரையம் பெற்ற ஏ அட்டவணை சொத்தில் முன்வாசல் நடப்பு மூலம் நடந்து கொள்ள வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளதால் பி அட்டவணை சொத்தில் எனக்கு புழங்க உரிமை உள்ளதாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏ அட்டவணை சொத்திற்கு கிழக்கில் சர்வே எண்.357/11 சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த சந்து எனது வரைபடத்தில் (வா.த.சா.ஆ.6) எல்லையாக காட்டப்பட்ட பி, ஜி புள்ளிகள் வரைக்கும் வருகிறது என்றால் சரிதான். ஏ அட்டவணை சொத்தில் நான் கட்டியுள்ள மெத்தை வீட்டிற்கு கிழக்கு பக்கம் வாசல் வைத்துள்ளேன் என்றால் இல்லை தெற்கு பக்கம் வைத்துள்ளேன். எனது பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ தெற்கு பார்த்து தான் வாசல் வைத்துள்ளேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 28.07.1964 ல் ஆதிமூலகோனார் எனது மாமனாருக்கு கிரையம் கொடுக்கும் போது கிரைய சொத்தை எப்படி அனுபவம் செய்து வந்தார் அதாவது வீடு கட்டியா, காலி மனையா வைத்து அனுபவித்தார் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆதிமூலம் எனது மாமனாருக்கு கிரையம் கொடுத்த காலத்திலேயே சர்வே எண்.357/11 ல் சந்து இருந்தது என்றால் சரிதான். அந்த சந்தை தான் கிரைய பத்திரத்தில் முன்வாசல் புழக்கம் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சந்தை தான் எனது மாமனார் மற்றும் நாங்கள் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். பி அட்டவணை சொத்து பொது இடம் என்றும், அதில் யாருக்கும் அனுபவ உரிமை இல்லை என்று எனது பிராதில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை நான் சொல்லவில்லை. பி அட்டவணை சொத்திற்கு தென்புறத்தில் உள்ள சர்வே எண்.357/9 ல் அஞ்சலத்திடம் இருந்து அமிர்தம் கிரையம் பெற்ற சொத்தில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாகவும் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனது பிராதில் 7 வது பத்தியில் அமிர்தம் கிரையம் பெற்ற பத்திரத்தில் 357/7 அல்லது 357/9 என்று குறிப்பிட்டிருந்தாலும் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். பிராது 7 வது பத்தியில் அமிர்தம் கிரையம் பெற்ற பத்திரத்தில் காலி இடத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள வகையிலும் பி அட்டவணை சொத்தில் எனக்கு புழக்க உரிமை உள்ளதாக கூறுகிறேன் என்றால் சரிதான். நான் வழக்கில் கூறும் பரிகாரத்திற்கு வா.த.சா.ஆ.1 தான் அடிப்படை. வா.த.சா.ஆ.1 ல் நான்கெல்லையில் பி அட்டவணை சொத்தானது நந்தகுமாருக்கு பாத்தியமானது என்று கண்டு தான் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் முன்புறம் வாசல் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அது எந்த பக்கம் உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் பிராது 8வது பத்தியில் வசதியுரிமை கோரியுள்ளேன் என்றும், பிரதிவாதியின் அனுபவத்தை ஒப்புக்கொண்டு தான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். எனது பிராது பரிகாரத்தில் பி, சி அட்டவணை சொத்துக்களின் வழியாக வசதியுரிமை கோரியுள்ளேன் என்றும், பிரதிவாதியின் அனுபவத்தை ஒப்புக்கொண்டு தான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் சட்டப்பிரிவு 31 ன் கீழ் நீதிமன்ற கட்டணம் செலுத்தி எதிர்வாதிகளுக்கு உரிமை இல்லை என்று வழக்கு அம்சங்களில் பி அட்டவணை சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியமில்லை என்று கூறி இவ்வழக்கினை நடந்த முரண் தடை கோட்பாட்டினால் தடைசெய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் கூறியுள்ள சர்வே எண்.357/11 என்று பிராது படியும் வரைபடங்களையும், வருவாய் துறை ஆணவங்களின் படியும் பாதையாக தான் உள்ளது என்றால் சரிதான். அத்தியாவசிய வசதி உரிமை என்பது பாதையே இல்லாத போது தான் கோர இயலும் என்றால் எனக்கு தெரியாது. சி அட்டவணை பொது சந்தான சர்வே எண்.357/11 ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். சி அட்டவணை சொத்தில் ஆக்கிரமிப்பு செய்வதாக எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 3வது பிரதிவாதி இராமசாமி சி அட்டவணை சொத்தில் சிமெண்ட் போட்டுள்ளார் என்று என் பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது பிராதில் 11வது பத்தியில் பி மற்றும் சி அட்டவணை சொத்தின் வழியாக கால் வைத்து மாரியம்மன் கோவில் தெருவிற்கு செல்ல வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். பி மற்றும் சி அட்டவணை சொத்தின் வழியாக எனது சவுரியத்திற்கு செல்வதற்கு என்னால் வசதி உரிமை கோர முடியாது

என்றால் அது எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள நடப்பு சி அட்டவணை சந்து என்றால் சரியல்ல. எனது கணவருக்கும் அவர் சகோதரர் பெருமாளுக்கும் எப்போது பாகம் பிரிக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது திருமணத்திற்கு பின்பு பாகம் பிரிக்கப்பட்டது. எனது திருமணத்திற்கு பிறகு தான் பாகம் பிரிக்கப்பட்டது என்று எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஏ அட்டவணை சொத்து எங்களுக்கு தான் பாத்தியப்பட்டதா என்பது எனது கொளுந்தனாரை விசாரித்தால் தான் இந்த நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றால் எனது கொளுந்தனார் இறந்து விட்டார் வேறு யாரையாவது விசாரித்தால் தான் தெரியும். நான் வழக்கு சொத்தில் மெத்தை வீடு கட்டியுள்ளதை ஏன் இந்த நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. சி அட்டவணை சொத்தை பார்த்து தான் என் மெத்தை வீட்டிற்கு வாசல் வைத்து அதனால் தான் அந்த விவரத்தை இந்த நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன் வந்து பி அட்டவணை சொத்தை மணியகாரர் எனக்கு பட்டா போட்டு தருவதாக சொன்னார். நான் பட்டா வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் ஆனால் அவர்கள் பட்டா வாங்கியதால் தான் தற்போது பிரச்சனை. பி அட்டவணை சொத்து காலி நத்தமோ காலி மனையோ என்று காண்பிக்க இந்த நீதிமன்றத்தில் பட்டா அல்லது சிட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அமிர்தத்திற்கு கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் அஞ்சலத்தின் கணவர் பெயர் தொப்பை என்றால் சரிதான். எனது பிராது 7வது பத்தியில் சர்வே எண்.357/7 அஞ்சலித்திற்கு அல்லது அமிர்தத்திற்கு பாத்தியமானது என்று சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. அஞ்சலம் கிரையம் வாங்கிய சர்வே எண்.357/9 சொத்திற்கு மேற்கில் அமிர்தத்தின் பூர்வீக சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது வரைபடத்தின் படி அமிர்தம் பூர்வீக கூரை வீடு என்று காட்டப்பட்டுள்ள பகுதிக்கு வடபுறத்தில் சர்வே எண்.357/7 சொத்தை அஞ்சலத்திடம் இருந்து அமிர்தம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அஞ்சலம் மற்றும் அமிர்தம் மட்டும் தான் பி அட்டவணை சொத்தை பொதுவாக வைத்து அனுபவித்து வந்தார்கள் என்றும், எனக்கோ எனது மாமனாருக்கோ எந்த நடப்பு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ஆதிமூலம், எனது மாமனார், நான் என்னுடைய கொளுந்தனார் ஆகியோர் சி அட்டவணை சந்தை தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நடப்பு என்பது சி அட்டவணை சந்தை தான் குறிக்கும் என்றால் சரியல்ல. ஆதிமூலம் காலத்திலும் எனது மாமனார் காலத்திலும், என்னுடைய காலத்திலும் சி அட்டவணை சொத்து பார்த்து தான் வாசல் உள்ளது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ன் படி எ அட்டவணை சொத்திற்கு தெற்கில் நான்கெல்லையில் நந்தகோனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அவரின் சகோதரர் கோவிந்த கோனார் என்றால் சரிதான். கோவிந்த கோனாரின் மகன் தொப்பை, தொப்பையின் மனைவி தான் அஞ்சலம் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ன் படி பி அட்டவணை சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அமிர்தம் கிரையம் பெறும் காலத்தில் பி அட்டவணை சொத்து அமிர்தம் மற்றும் அஞ்சலம்

இருவருக்கும் பொதுவான இடம் என்று காட்டப்பட்டதை அனுகூலமாக கொண்டு, எனக்கு வழக்காட உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் வாதியாக இருந்து பிரதிவாதிகளின் ஆவணங்களின் அடிப்படையில் என்னால் வழக்காட முடியாது என்றால் சரியல்ல. அமிர்தத்திற்கு கிரையம் கொடுத்த அஞ்சலத்திற்கு ஒரேஒரு மகளாக கொளஞ்சி மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். கொளஞ்சி இறந்த பிறகு அமிர்தம், அஞ்சலத்துடன் தான் இருந்தார் என்றால் இல்லை, என்னுடன் தான் இருந்தார் நான் தான் கஞ்சி தண்ணீர் கொடுத்தேன், ஆனால் வேறு யாருக்கோ சொத்தை கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அது எனக்கு வருத்தம் இல்லை. பி அட்டவணை சொத்தை 70 வருடங்களாக அமிர்தம் மற்றும் அஞ்சலை அனுபவித்து வந்ததை என் கணவரோ என் மாமனாரோ ஆட்சேபனை செய்யவில்லை என்றால் நான் தான் அனுபவித்து வந்தேன். நான் மட்டுமே அனுபவித்து வந்த பி அட்டவணை சொத்தை ஏன் பொது இடம் என்று காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியாது என்று தெரியும். பி அட்டவணை சொத்திற்கு நான் பொது இடம் என்று ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அஞ்சலம் இறந்த பிறகு 2வது பிரதிவாதி பெயரில் சொத்து இருந்தது என்றால் சரிதான். 1வது பிரதிவாதி மல்லிகா கொட்டாய் போட்டு மாடுகளை கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. அந்த அனுபவத்தின் பெயரில் தான் 1வது பிரதிவாதிக்கு ஆராய்ந்த பின்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1வது பிரதிவாதிக்கு வழங்கிய பட்டாவை எதிர்த்து வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த மனுவில் பி அட்டவணை சொத்து பற்றி என்ன சொல்லியுள்ளேன் என்பது அந்த மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் தெரியும் என்றால் எனக்கு தெரியாது. எனது பிராது 16 வது பத்தியில் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து அது கோப்பில் எடுக்கப்பட்டு விசாரணை ஒத்திவைத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வட்டாட்சியரிடம் மனு கொடுத்து பட்டாவை ரத்து செய்யக்கோரி கேட்ட அதே பரிகாரத்திற்கு தான் இந்த வழக்கில் 1வது பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. ஒரே பரிகாரத்திற்கு 2 அமைப்புகளிலும் என்னால் கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்கு சி அட்டவணை சந்தில் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சி அட்டவணை சொத்து வழியாக மாரியம்மன் கோவில் தெருவிற்கு நடந்து புழங்கி வர முடியும் என்றும், பி அட்டவணை சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் பி அட்டவணை சொத்திற்கு பட்டா அரசாங்கத்தால் அவர்களின் அனுபவத்தை அனுசரித்து தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தில் எனது மாமனாருக்கோ, என் கணவருக்கோ, எனக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ஏ அட்டவணை சொத்திற்கு சி அட்டவணை சந்து தான் பாதை என்றும், அது வழியாக தான் நான் சென்று அனுபவித்து வருகிறேன் என்றும், பி, சி அட்டவணை சேர்த்து என்னால்

பரிகாரம் கோர இயலாது என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.01.28 15:42:48 +0530

Additional District Munsif,
Tittagudi.